**MCOP NO. 118 /2015**

**Date 09.04.2026**

**Pw 2. சிவகாமி**

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து சம்மந்தமாக சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் வரவில்லை. என்னை சாட்சியம் அளிக்க யார் அழைத்து வந்தார்கள் என்றால் 1ம் மனுதாரர் அழைத்து வந்தார். மேற்படி விபத்து சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். மேற்படி விபத்து சம்மந்தமாக சிவகிரி குற்றவியல் நீதிமன்றத்தில் சாட்சியம் ஏதும் அளிக்கவில்லை. 1ம் மனுதாரர் எனக்கு உறவினர் என்றால் எனக்கு துாரத்து சொந்தம் ஆவார். மேற்படி விபத்து சமயத்தில் இறந்து போனவர் முந்தி செல்ல முற்பட்ட பேரூந்து எவ்வளவு வேகத்தில் சென்றது என்று கேட்டால் சுமார் 70-80 கிலோமீட்டர் வேகத்தில் சென்றது, ஆனால் மெதுவாகத்தான் சென்றது. பேரூந்து 70 கிலோமீட்டர் வேகத்தில் சென்றதாக சொல்லியுள்ள நிலையில் விபத்தில் இறந்து போன முத்துராஜ் என்பவர் அதை விட வேகமாகத்தான் வாகனத்தை ஓட்டி சென்றிருப்பார் என்றால் சரியல்ல. 1ம் மனுதாரர் எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்தில் இறந்து போன முத்துராஜ் என்பவர் மீது தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி விபத்தானது விபத்தில் இறந்து போன முத்துராஜ் என்பவர் கவனம் இல்லாமல் ஓட்டிச்சென்றதால்தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

Sd/-P.Mahindra Varma
Subordinate Judge,
Sankarankovil.